



# பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான இன்ஸ்டாகிராம் வழிகாட்டி



ஒத்துழைப்பு

ICTA ideas actioned

Sri Lanka Youth

fusion Sarvodaya ICT4D Movement

HITHAWATHI Your Confidante in CyberSpace





# உள்ளடக்கம்


01 / அறிமுகம்....04

தமித்த விக்ரமசிங்கவிடமிருந்தான செய்தி....05

மைத்ரி மல்வத்தேகொடவிடமிருந்தான செய்தி....07

02 / இன்ஸ்டாகிராம் என்பது யாது?....09

03 / தனியுரிமையை நிர்வகித்தல்.... 11

கணக்கு தனியுரிமை.... 12

நெருங்கிய நண்பர்களுடன் ஸ்டோரிகளைப் பகிர்தல்.... 14

செய்தி கட்டுப்பாடுகள்....16

விளம்பரதாரர்களின் இலக்கினை வரையறுத்தல்.... 20

04 / தொடர்புகளை நிர்வகித்தல்.... 21

தொடர்புகளைப் புகாரளித்தல்....22

கோரிக்கைகளை ஆதரித்தல்.... 24

லைக் எண்ணிக்கைகளை நிர்வகித்தல்....25

தேவையற்ற தொடர்புகளை தடுத்தல் (ப்ளொக் செய்தல்).... 27

ஒரு கணக்கினை ம்யூட் செய்தல்.... 29

ஒரு கணக்கினை கட்டுப்படுத்தல்.... 30

05 / கமெண்ட்களை நிர்வகித்தல்.....31

கமெண்ட்ஸ் கட்டுப்பாடுகள்.....32

பொருத்தமற்ற கமெண்ட்களை பிள்ட்டர் செய்தல்.....33

புண்படுத்தும் செய்திகளை பிள்ட்டர் செய்தல்.....34

கமெண்ட்ஸ் எச்சரிக்கைகள்.....36

மொத்த கமெண்ட்ஸ் முகாமைத்துவம்.....37

கமென்ட்களை ப்ளொக் செய்தல்.....39

நேர்மறையான கமென்ட்களை பின் செய்தல்.....40

டேக்(TAG) மற்றும் மென்ஷன்களை கட்டுப்படுத்தல்..... 42

06 / நேரத்தை நிர்வகித்தல்.....44

உங்களது நடவடிக்கைகளை அறிந்துகொள்ளுதல்.....45

நாளாந்த நினைவூட்டல்களை அமைத்தல்.....46

அறிவிப்பை முடக்கு.....47

07 / பாதுகாப்பை நிர்வகித்தல்.....49

இரண்டு காரணி பாதுகாப்பு உறுதிப்பாடு.....50

இன்ஸ்டாகிராமிடமிருந்தான மின்னஞ்சல்.....51

உழ்நுழைவு (லொக்கின்) செயற்பாடுகள்.....52

காப்புக்குறியீடு (பெக்கப் கோட்ஸ்).....53

08 / ஏனைய உதவிகள்.....54

09 / இன்ஸ்டகிராம் வார்த்தைகள் மற்றும் அர்த்தங்கள்.....56

10 / ஆதாரங்கள்.....58

01 /

# அறிமுகம்



# தமித்த விக்ரமசிங்கவிடமிருந்தான செய்தி

(தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தற்போதைய தலைவர்)



“ நிகழ்காலத்தில் இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்கள் என்பன எமக்கு இன்றியமையாததாகிவிட்டன. உலகளாவிய உறவுகள் மற்றும் சமூக மாற்றங்களுடன் வேகமாக முன்னோக்கிச் செல்லும் பரம்பரை என்ற வகையில் இளைய தலைமுறையினர் இவ் ஊடகங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் ஏராளம். இதன்போதிலும் இன்ஸ்டாகிராம் இளைய தலைமுறையினரின் எண்ணங்கள் மற்றும் திறமைகளை வெளிக்கொணரும், புதிய உறவுகளை உருவாக்குவதோடு புதிய வணிக வாய்ப்புகளை உருவாக்குவதற்கான காரணியாகவும் மாறியுள்ளது. எனினும் சரியான புரிதலுடனும் வழி காட்டுதலுடனும் அவற்றை பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகளை இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்திக் கொடுப்பதினை உறுதி செய்ய வேண்டியது எமது கடமையும் பொறுப்புமாகும்.

நான் தமித்த விக்ரமசிங்க, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தற்போதைய தலைவராக பதவி வகிக்கின்றேன். இளைய தலைமுறையினருடன் அடிக்கடி இணைந்து செயற்படுவதால் அவர்களிடம் காணப்படும் வரம்பற்ற சாத்தியக் கூறுகளை நான் தொடர்ச்சியாக அவதானிக்கிக்றேன். அதே போன்று நான் ஒரு தந்தை, அதனாலேயே பிள்ளைகளுக்கு சிறந்தது எனினும் அதனை சரியான முறையில் பெற்றுக்கொடுப்பதனை ஆணித்தரமாக நம்புகின்றேன். இளைஞர் சேவை மன்றம் என்ற வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாய்ப்புகளை பயன்படுத்தி இலங்கையின் இளைஞர் சமுதாயம் பொறுப்புடன் சவால்களுக்கு முகங்கொடுக்கும் திறன்கள் மற்றும் அணுகுமுறைகளுடன் தேசிய மற்றும் வெளிநாட்டு தொழில்களுக்கு ஏற்ற நிபுணத்துவத்துடன் கூடிய ஆட்களாக சமூகமயமாக்குவதற்கு பல வருடங்களாக வேலை செய்கின்றோம். காலத்திற்கு தகுந்த இளைஞர்களின் எதிர் காலத்திற்கு

பொருத்தமான தொழில் வாய்ப்புகளுக்கு அவர்களை சரியான வழிகாட்டுதலிற்கு இட்டுச்செல்வதின் கீழ் பரிந்துரைக்கப்படுகின்றது.

தொழிநுட்ப சாதனங்கள் காலத்திற்கு ஏற்றாற்போல் வேகமாக மாற்றமடைந்து வருகின்றன. சமூக உறவை உருவாக்குவதற்கான திறன்களை வெளிப்படுத்தும் தளங்களும் முறைகளும் மாற்றமடைந்து வருகின்றன. புதிய வணிக வாய்ப்புகள் மற்றும் புதிய தொழில் வாய்ப்புகளும் கூட உருவாகும். இவை அனைத்திற்கும் பொருத்தமான, சவால்களை எதிர்கொள்ளக் கூடிய சரியான புரிதலுடன் தொழிநுட்பத்தின் பலன்களை வெளிக்கொணரக் கூடிய குழுவினை உருவாக்க புதிய தொழிநுட்பத்தை இளைஞர்கள் மத்தியில் கொண்டு சேர்க்க வேண்டும். எனினும் அவர்களிடம் கட்டியெழுப்பப்படும் போது சரியான புரிதல் தேவைப்படின் சரியான ஆதரவை வழங்குவதன் ஊடாக அவர்களின் சைபர் (Cyber) சமூக பாதுகாப்பை உறுதி செய்கின்றது. இது ஊடகங்களில் தன்னை முன்னிலைப்படுத்தவும் வாழ்க்கையில் அவர்களுக்கு தேவையானதை சரியான முறையில் உள்வாங்கவும் அவர்களைப் பழக்கப்படுத்துகின்றது.

Instagram உடன் நாம் தொடர்புபடுவது நிகழ்கால சமூகத்தில் பரஸ்பர உறவினை மேற்கொள்வதில் அத்தியாவசியமான கருவியாக இருப்பதனாலேயாகும். Instagram இனை எவ்வாறு சரியாக பயன்படுத்துவது என்பதற்கான பிரத்தியேகங்கள் மற்றும் திறன்களை அறிந்து கற்றுக்கொள்வதன் மூலம் ஒரு இளைஞனாக உங்கள் பிள்ளையை பாதுகாப்பாக உலகை எதிர்கொள்ள அனுமதிப்பதோடு பெற்றோர் என்ற வகையில் நீங்களும் பாதுகாப்பாகவும் பயமின்றியும் பொறுப்புடனும் புதிய உலகத்திற்கான கதவை திறக்கும் வாய்ப்பை பெறுவீர்கள். உண்மையில் தேவைப்படுவது புதிய தொழிநுட்பம் மற்றும் டிஜிட்டல் உலகம் தொடர்பான சரியான கற்றலும் நவீன கருவிகளை தவறாக பயன்படுத்தாமல் வெற்றியை நோக்கி தடையின்றி பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதலாகும். இவை அனைத்தும் உடனடியாகவும் முறையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும், ஏனெனில் இளைஞர் சமுதாயம் தான் நாட்டின் எதிர்கால நம்பிக்கை. ”

# மைத்ரி மல்வத்தேகொடவிடமிருந்தான செய்தி



“ பல வகையான சமூக ஊடகங்களில் Instagram கட்டிளமைப் பருவ பிள்ளைகள் மத்தியில் ஈர்ப்புடன் இருக்கும் பிரசித்தமான அப் ஆக மாறியுள்ளது. தனது நாளாந்த வாழ்வின் வேறுபட்ட சந்தர்ப்பங்கள், பயண அனுபவங்கள், நாகரீகம் சார்ந்த விடயங்கள் போன்ற தனது திறன்களை புகைப்படங்கள் மூலம் பகிர்வதற்கு, இதனை ஒத்த ரசனைகளைக் கொண்ட புதிய நண்பர்களை அடையாளம் காண்பதற்கு, தான் விரும்பும் பிரசித்தமானவர்களுடன் தொடர்பு கொள்ளவும் Instagram சமூக ஊடக வாய்ப்பினை கட்டிளமைப் பருவ பிள்ளைகள் பயன்படுத்துகின்றனர். பெற்றோர் என்ற வகையில் நாம் அவர்களின் நோக்கங்களை நன்கு அறிந்து செயற்பட வேண்டும்.

நான் மைத்ரி மல்வத்தேகொட, ஒரு தாய் மட்டுமல்லாது தொழில் மூல சர்வோதய பியுஷன் நிறுவனத்தில் பொது மேலாளராக பதவி வகிக்கிறேன். எமது நிறுவனம் 18 வருட காலமாக வளர்ச்சிக்கான தகவல் தொழில்நுட்ப (ICT4D) பார்வை மூலம் சமூகத்தை வலுவூட்டுவது இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதே போன்று 2015ம் ஆண்டிலிருந்து எமது நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் “IT யஹமக” நிகழ்ச்சி மூலம் பொறுப்புடன் கூடிய டிஜிட்டல் பிரஜைகளை உருவாக்கும் நாடளாவிய பணியில் பிள்ளைகள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் இணையத்தளம் மற்றும் சமூக ஊடக பாவனைகளில் முகங்கொடுக்கும் பிரச்சனைகள் மற்றும் சவால்கள்களை புரிந்துகொள்ள எனக்கு முடியுமானதாக இருந்தது.

சமூக ஊடக பயன்பாட்டில் பிள்ளைகள் நம்மை விட முன்னிலையில் உள்ளனர். எனினும் இதனால் கருதப்படுவது நாம் அவர்களை அதிலிருந்து தடுக்க வேண்டுமென்பதல்ல. மிகவும் முக்கியமானது இணைய வாய்ப்புகளில் பிள்ளைகள் பாதுகாப்பாக ஈடுபடும் வகையில் நாம் பொறுப்புடன் செயற்படுவதாகும். பிள்ளைகளுடன் நெருங்கிய தொடர்பினை கட்டியெழுப்புவது இதற்கு உதவியாக இருக்கும்.

13 – 19 வயதிற்கிடைப்பட்ட கட்டிளமைப் பருவம் அனைத்து பிள்ளைகளுக்கும் சவாலானது. இக்கால கட்டத்தில் உடலளவிலும் மனதளவிலும் பாரிய மாற்றங்களுக்கு முகங்கொடுப்பர். முயற்சித்துப் பார்த்தல் சமூக உறவுகளிடம்

தனது தனிப்பட்ட அடையாளங்களை கட்டியெழுப்புவதில் மற்றவர்களின் அவதானத்திற்குட்படும் விடயங்கள் இப்போது அவர்கள் வாழ்வின் ஒரு பகுதியாக மாறும். டிஜிட்டல் வாய்ப்புகள் இவற்றிற்கு அவர்களுக்கு கிடைக்கும் மையமாகும். இவ் டிஜிட்டல் வாய்ப்புகளை பொறுப்புடன் பயன்படுத்துவதின் புதிய வாய்ப்புகளை அறிந்துகொள்ள தனது திறன்களை வளர்த்துக்கொள்ள நட்ப உறவுகள் மற்றும் வணிக வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள அவர்களுக்கு முடிகின்றது.

கீழே குறிப்பிடப்பட்டிருப்பது விஷேடமாக Instagram மற்றும் ஏனைய சமூக ஊடக வாய்ப்புகளைப் பயன்படுத்தும் கட்டிளமைப் பருவ பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு தெவையான சில குறிப்புகளாகும். உங்களது கட்டிளமைப் பருவ பிள்ளையிடம் இதனை பகிர்ந்துகொள்ளுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வாழ்க்கை மதிப்புகள் மற்றும் சமூக மதிப்புகளை பராமரித்தல்

சிறு வயதிலிருந்தே வாழ்க்கை மதிப்புகள் மற்றும் சமூக மதிப்புகளில் தனது வாழ்க்கையை வடிவமைத்துக்கொள்ளவதை பிள்ளைகளுக்கு அடையாளப்படுத்துங்கள். விஷேடமாக இணையத்தள பாவனையின்போது விதிகளை அமைத்து அவர்களின் வரம்புகளை அடையாளப்படுத்திக் கொடுக்க வெண்டும். சாதாரண வாழ்வின் செயற்பாட்டில் பொருந்தக்கூடிய ஒழுக்கம் ஆன்லைன் செயற்பாடுகளுக்கும் பொருந்தும் என்பதை அடையாளப்படுத்துங்கள். அப்போது அவர்கள் தனியாக செயற்படும் போதும் அவற்றை கடைப்பிடிப்பார்கள்.

பிள்ளைகளுடன் பேசுங்கள்

பிள்ளைகளுடன் வெளிப்படையாக பேசுதல் குறிப்பாக இணையத்தில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சனைகள் தொடர்பில் வழிக் காட்டுதலை வழங்க கூடியதாய் அமையும். மூத்த பிள்ளைகளிடம் நீங்கள் இதுவரை அது தொடர்பில் பேசாதிருப்பின் மேலும் தாமதிக்காமல் இப்போதே பேச்சை தொடங்குங்கள்.

பயப்படாதீர்கள்

இணையத்தளம் மற்றும் பிள்ளைகள் தொடர்பில் எமக்கு எப்போதும் கேட்கக் கிடைப்பது பயப்படக்கூடிய விடயங்கள்தான். எனினும் உண்மையில் நிறைய பிள்ளைகள் சரியாக இணையத்தளத்தை பயன்படுத்துகின்றனர். இணையத்தளத்தை பயன்படுத்துவது நீச்சல் தடாகத்தி நீந்துவது போன்றது. பிள்ளைகளை பாதுகாக்க நாம் செய்யக்கூடிய சிறந்த செயல் பாதுகாப்பாக இருக்க அவர்களுக்கு அறிவூட்டுவது தான்.

உங்களது பிள்ளையின் சமூக ஊடக வாழ்க்கையின் ஒரு அங்கமாக நீங்கள் இருங்கள்

உங்களது பிள்ளையின் சமூக ஊடக பாவனையில் அதனுடன் உங்களால் தொடர்புபட முடியும், அவர்களுக்கு பிடித்த தலைப்பு, நபர்கள் மற்றும் வீடியோ தொடர்பில் அவர்களுடன் பேசுங்கள். அவர்களின் விருப்பம் தொடர்பில் உங்களுக்கு ஆர்வமிருப்பதை வெளிப்படுத்துங்கள். அப்போது அவர்கள் முகங்கொடுக்கும் இணையத்தள சவால்களின் மூல காரணங்கள் தொடர்பில் கலந்துரையாட உங்களை நாடுவர்.

பிள்ளையின் இணையத்தள பிரச்சனைகளின்போது உங்களை நாடுவதற்கான நெருக்கத்தை பேணுங்கள்.

பிள்ளைகளுக்கு இணையத்தளத்தில் பிரச்சினை ஏற்படும் போது செய்ய வேண்டியவற்றை தெளிவுபடுத்துங்கள். அது அவர்கள் அறியாத நபரிடமிருந்து வரும் செய்திகள், பரிந்துகொள்ள முடியாத தொடர்புகள் அல்லது பொருத்தமற்ற வீடியோக்கள் என எதுவாகவும் இருக்கலாம். சிறு விடயத்திற்கே உங்களை நாடுவதற்கு பிள்ளைகயுக்க வாய்ப்பிருக்குமாயின் மிக தீவிரமான வேளைகளில் அவர்கள் தானாகவே உங்களை நாடுவார்கள்.

நமது கட்டிளமைப் பருவ பிள்ளைகள் நிறைய நேரம் இணையத்தில் கழிப்பதிலும் வாழக்கையை பகிர்வதிலும் செலவிடுகின்றனர். இணையத்தளம் மூலம் இடம்பெறும் கல்வி நடவடிக்கைகள் மூலம் இப்போது இன்னும் அதிகமாகியுள்ளது. இது தொடர்பில் பெற்றோர் என்ற வகையில் எமக்கிருக்கும் பயம் அச்சத்தை போக்க இருக்கும் சிறந்த வழி இணையத்தளத்தில் எமது பிள்ளைகளின் பாதுகாப்பை ஏற்படுத்த பொறுப்புடன் செயற்படுவது.

இதில் முன்வைக்கப்படும் Instagram வழிகாட்டல் அமைக்கப்பட்டிருப்பது அதனாலேயே தான். இவ் வழிகாட்டல் மூலம் விஷேடமாக கட்டிளமைப்பருவ பிள்ளைகளின் இணையத்தள வாய்ப்புகளை பாதுகாப்பதும் அவர்கள் பார்ப்பதற்கேற்ற உள்ளடக்கம், தெரிந்தவர்களுடன் மட்டும் செய்தி பரிமாறல் மேற்கொள்ளக்கூடியதற்கேற்ற கணக்கினை அமைக்க உங்களுக்கு வாய்ப்பிருக்கிறது. உங்களது கட்டிளமைப்பருவத்தினர் டிஜிட்டல் வாய்ப்புகளில் செலவளிக்கும் நெரத்தை மிகவும் பாதுகாப்பதற்கான கருவிகள் இதன் மூலம் உங்களுக்கு பெற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனது தனியுரிமையை பாதுகாக்க பொறுப்புடன் கூடிய சமூக உறவுகளை கொண்டுநடாத்த எமது கட்டிளமைப்பருவத்தினரை பழக்கப்படுத்தட இவ் வழிகாட்டல் மூலம் பெற்றோர்களுக்கு இயலும்.

கட்டிளமைப்பருவத்தினருக்கு பொருந்தும் சவால்களுக்கு முகங்கொடுத்து பொறுப்புடன் கூடிய இணையத்தள வாய்ப்புகளில் வழிச்செல்ல எமது பிள்ளைகளை பழக்கப்படுத்த வேண்டும். அதற்காக இவ் வழிகாட்டல் உங்களுக்கு உதவும் என நான் நம்புகின்றேன். தொழிநுட்பம் மூலம் முன்னேரிச் செல்லும் இந் நிகழ்கால உலகத்தில் உங்களது கட்டிளமைப்பருவ பிள்ளைகள் டிஜிட்டல் வாய்ப்புகளில் பாதுகாப்பது ஒரு கூட்டு முயற்சியாகும். நூம் அனைவரும் அதில் பங்காளர்கள் ஆவோம். அதனால் இவ் வழிகாட்டலை பயன்படுத்துங்கள். எமது கட்டிளமைப்பருவ பிள்ளைகளை டிஜிட்டல் உலகில் மேலும் வலுப்படுத்த நாம் இடும் அஸ்திவாரம் இதுவாகும். ”

02 /

# இன்ஸ்டாகிராம் என்பது யாது?



இன்ஸ்டாகிராம் என்பது புகைப்படங்கள், வீடியோக்கள் மற்றும் செய்திகளைப் பகிரும் ஒரு அப் (App) ஆகும். இது மக்கள் சமூகத்துடன் ஒருவரையொருவர் தங்களின் ஆர்வங்களினூடாக ஒன்றிணைக்கப் பயன்படுகின்றது. இன்ஸ்டாகிராம் கட்டிளமைப் பருவத்தினரிடம் மிகவும் பிரபலமாக உள்ளது. புகைப்படங்கள், வீடியோக்கள், வடிப்பான்கள், கருத்துக்கள், தலைப்புக்கள், எமோஜிகள் மற்றும் ஹேஷ்டேக்களை பயன்படுத்தி அவர்கள் சிறப்பு தருணங்களை படம்பிடிக்கவும், ஒருவரையொருவர் தொடர்புகொள்ளவும், மகிழ்ச்சியான முறையில் உரையாடல்களை மேற்கொள்ளவும் இதனைப் பயன்படுத்துகின்றனர்.

இன்ஸ்டாகிராம் Apple iOS, Android சாதனங்கள் மற்றும் இணையத்தினால் இயங்குகின்றது. இன்ஸ்டாகிராம் கணக்கை வைத்திருப்பதற்கான குறைந்தபட்ச வயதெல்லை 13 ஆகும். இன்ஸ்டாகிராமை பயன்படுத்த ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் 13 வயதுடையவர்களாக இருக்க வேண்டுமென நாங்கள் கோருகின்றோம். மேலும் புதிய பயனர்களைப் பதிவு செய்யும் போது அவர்களின் வயதை குறிப்பிடுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். பலர் தங்களது வயதினை உண்மையாக கூறும் போதிலும் இளைஞர்கள் பொய் சொல்லலாம் என்பதை நாங்கள் அறிவோம். இதனை தடுக்க நாங்கள் மேலும் செய்ய விரும்புகின்றோம். எனினும் ஆன்லைனில் ஒருவரின் வயதை சரிபார்ப்பது என்பது சற்று கடினமானது மற்றும் எமது துறையில் பலர் போராடுகின்றனர். இச் சவாலை எதிர்கொள்ள, இவ் வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று கட்டிளமைப் பருவத்தினரை பாதுகாக்க மற்றும் புதிய வயது சார்ந்த அம்சங்களை நடைமுறைப்படுத்த நாங்கள் புதிய செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றல் தொழிநுட்பத்தை மேம்படுத்தி வருகின்றோம்.

பீட்(Feed), DM கள், ஸ்டோரிகள், லைவ்ஸ் (Lives) அல்லது IGTV இதில் எதன் மூலமாக இருந்தாலும் மக்கள் விரும்பும் நபர்களையும் அவர்களின் விருப்பங்களையும் இணைப்பதே எங்களின் நோக்கமாகும். இன்ஸ்டாகிராமில் எங்கள் விதிகளை விளக்கும் சமூக வழிகாட்டி உள்ளது. அச் சமூக வழிகாட்டியை பின்பற்றுமாறு நாங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம். அதை மீறும் கணக்குகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். எமது சமூகத்திலுள்ள அனைவரும் சுதந்திரமாக தங்களை வெளிப்படுத்திக்கொள்ள இன்ஸ்டாகிராமை பாதுகாப்பான மற்றும் ஆதரவான இடமாக மாற்றுவது அவசியம் என்பதை நாங்கள் அறிவோம்.

இன்ஸ்டாகிராமின் பாதுகாப்பு பற்றி மேலும் அறிய https://www.instagram.com/creators/guide/tools-for-a-safe-positive-experience/17876204894093335/ இற்கு பிரவேசிக்க.



ஒருவரையொருவர் இணைக்கும் மக்களின் சமூகம்



சிறப்பு தருணங்களை படம் பிடித்தல் மற்றும் பகிர்தல்



மக்களை நெருக்கமாக கொண்டுவரல்



காலாச்சாரத்தை முன்னோக்கி செலுத்தல்



பாதுகாப்பான மற்றும் ஆதரவான இடம்

03 /

# தனியுரிமையை நிர்வகித்தல்



தனியுரிமை என்பது முக்கியமானதாகும். உங்களது கட்டிளமைப் பருவத்தினருடன் நீங்கள் பகிர்ந்துக்கொள்ளக்கூடிய பல அம்சங்கள் உள்ளன. அவை அவர்களின் டிஜிட்டல் அடையாளம் மற்றும் தடங்கள் மீது அதிக கட்டுப்பாட்டை கொடுக்கும்.

நீங்கள் பேச விரும்பும் விடயங்களில் முக்கியமான விடயம் அவர்களின் கணக்கு தனிப்பட்டதா அல்லது பொதுவானதா என்பதுதான். கட்டிளமைப் பருவத்தினர் தனது கணக்கை தனிப்பட்டதாக மாற்ற பரிந்துரைக்கின்றோம். அதனால் தான் இன்ஸ்டாகிராமில் பதிவு செய்யும் 18 வயதிற்குட்பட்ட எவரும் பொது அல்லது தனிப்பட்ட கணக்கு தேர்வு விருப்பத்தை பெறுவார்கள். இயல்பாகவே தனிப்பட்ட கணக்கு தேர்ந்தெடுக்கப்படும்.


அவர்கள் ஆன்லைனில் இடுகையிடும் போது அதனை யார் பார்க்கிறார்கள் மற்றும் தொடர்பு கொள்கிறார்கள் என்பதில் அவர்களுக்கு கட்டுப்பாடு உள்ளது என்பதை உணர்வதன் மூலம் கட்டிளமைப் பருவத்தினர் இன்ஸ்டாகிராமில் தங்களைத் தானே பாதுகாத்துக்கொள்ள உதவும்.

# கணக்கு தனியுரிமை

இளைஞர்களுக்கு இன்ஸ்டாகிராமில் அவர்கள் விரும்பும் அனைத்து விடயங்களையும் வழங்குவதில் சமநிலையை அடைய விரும்புகின்றோம். அதேவேளை அவர்களை பாதுகாப்பாகவும் வைத்திருக்கின்றோம். அவர்களுக்குத் தெரியாத அல்லது விருப்பமில்லாத நபர்கள் அவர்களைத் தொடர்புகொள்வதை நாங்கள் விரும்பவில்லை. அது நிகழாமல் தடுக்க தனிப்பட்ட கணக்கினை பேணுவதே சிறந்த வழி என நாங்கள் நம்புகின்றோம்.

தனிப்பட்ட கணக்கினை பேணுவது உங்களது கட்டிளமைப் பருவத்தினர் தனது உள்ளடக்கத்தை யார் பார்க்கிறார்கள் அல்லது பதிலளிக்கிறார்கள் என்பதை கட்டுப்படுத்த உதவும். உங்களிடம் தனிப்பட்ட கணக்கு இருந்தால் உங்களின் இடுகைகள், ஸ்டோரிகள் மற்றும் ரீல்களை பார்வையிட அவர்கள் உங்களைப் பின் தொடர வேண்டும். முதலில் நீங்கள் அனைத்து பின் தொடரல் கோரிக்கைகளை ஏற்க வேண்டும். நீங்கள் ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவ்விடத்தில் உங்களின் உள்ளடக்கம் பற்றி கருத்து தெரிவிக்க முடியாது. மேலும் அவர்கள் உங்களின் உள்ளடக்கத்தை ஹேஷ்டேக்குகள் போன்றவற்றிலும் பார்க்க இயலாது.

அதனால்தான் இங்கிலாந்தின் 18 வயதிற்குட்பட்டவர்கள் இன்ஸ்டாகிராமில் பதிவு செய்யும் போது தனிப்பட்ட கணக்கை தெரிவு செய்வதற்கான விருப்பத் தேர்வை பெறுவார்கள்.





18 வயதிற்குட்பட்ட கட்டிளமைப் பருவத்தினர் பதிவு செய்யும் போது இயல்பாகவே தனிப்பட்ட கணக்கின் தெரிவு

# கணக்கு தனியுரிமை

இன்ஸ்டாகிராமில் பொது கணக்கு வைத்திருக்கும் இளைஞர்களுக்கு அவர்களின் கணக்கு பொது என்பதை நினைவூட்டும் அறிவிப்பை நாங்கள் காண்பிப்போம். மேலும் அவர்கள் எவ்வாறு தனிப்பட்டதாக மாறலாம் என்பதை விளக்குவோம். பொது கணக்கு வைத்திருந்தாலும் உங்களது கட்டிளமைப் பருவத்தினர் பின்தொடர்பவர்களை நீக்கலாம் யார் கருத்து தெரிவிக்கலாம் என்பதை தேர்வு செய்யலாம். மற்றும் செயற்பாட்டு நிலையை முடக்குவதனால் அவர்கள் ஆன்லைனில் இருப்பது தெரியாது. உங்களது கட்டிளமைப் பருவத்தினரின் கணக்கு பொதுவாக இருந்தால் இன்ஸ்டாகிராமில் அல்லது இன்ஸ்டாகிராம் கணக்கு இல்லாத எவரும் அவர்களின் உள்ளடக்கம், ஊட்டம், ஸ்டோரி மற்றும் நேரலைகளைப் பார்க்கலாம் மேலும் அனுமதியின்றி பின்தொடரலாம். பொது கணக்கை வைத்திருக்க விரும்பும் இளைஞர்கள் இன்னும் இருப்பார்கள் என்பது எமக்கு தெரியும். உதாரணமாக பார்வையாளர்களை உருவாக்க முயற்சிக்கும் இளம் படைப்பாளிகள். அதனால் தான் அவர்களுக்கு இன்னுமொரு தேர்வை வழங்குகிறோம். உங்களது கட்டிளமைப் பருவத்தினரின் கணக்கு பொதுவாக இருந்தால் அவர்களின் தனியுரிமை அமைப்புகளில் தனிப்பட்டதாக மாறலாம்.




தனிப்பட்ட கணக்கிற்கு மாறுவதற்கான அறிவிப்பு




அமைப்புகள் தனியரிமை தனியார் கணக்காக மாற்றவும்








# நெருங்கிய நண்பர்களுடன் ஸ்டோரிகளைப் பகிர்தல்


நெருங்கிய நண்பர்களுடன் ஸ்டோரிகளைப் பகிரவும் உங்களது கட்டிளமைப் பருவத்தினர் நெருங்கிய நண்பர்கள் பட்டியலை உருவாக்கி அதில் உள்ளவர்களுடன் மட்டுமே பகிர முடியும்.

அவர்கள் எந்த நேரத்திலும் பட்டியலில் இருந்து நபர்களை சேர்க்கலாம் மற்றும் அகற்றலாம். இதன்போது அவர்களுக்கு அறிவிக்கப்பட மாட்டாது.


# ஸ்டோரிஸ் (Stories) ஐ நெருங்கிய நண்பர்களுடன் பகிருதல்




SETTINGS → ACCOUNT → CLOSE FRIENDS LIST




பின்தொடர்தல் பட்டியலில் நபர்களை சேர்த்தல் மற்றும் நீக்குதல்




நெருங்கிய நண்பர்களுடன் பகிரப்பட்ட ஸ்டோரிஸ் பச்சை நிற வட்ட வடிவில் இருக்கும்




நெருங்கிய நண்பர்களுடன் பகிரப்பட்ட ஸ்டோரிஸ் ஐ பார்வையிடும் போது பச்சை நிற டேக் (TAG) காணப்படும்.






# செய்தி கட்டுப்பாடுகள்

இன்ஸ்டாகிராமில் உள்ள அனைவரும் குறிப்பாக இளைஞர்கள் அவர்களுடன் யார் தொடர்பு கொள்ளலாம் என்பதை கட்டுப்படுத்த வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம். மேலும் அவர்கள் தங்களுக்கு தெரியாத நபர்களிடமிருந்து வரும் தேவையற்ற செய்திகளைப் பெறுவதை நாங்கள் விரும்பவில்லை.


அதனால்தான் இளைஞர்களை DM (Direct Messages) எனப்படும் நேரடி செய்திகளில் இருந்து பாதுகாப்பதற்காக தொடர் அம்சங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இன்ஸ்டாகிராமில் உள்ள ஒவ்வொருவரும் தங்களுக்கு யார் DMகளை அனுப்பலாம் மற்றும் குழு செட்களில் அவர்களை யார் சேர்க்கலாம் என்பதை கட்டுப்படுத்தலாம். அதாவது உங்களது கட்டிளமைப் பருவத்தினர் தங்களை பின்தொடர்பவர்களிடமிருந்து செய்திகளைப் பெற மட்டுமே தேர்வு செய்ய முடியும்.


# செய்தி கட்டுப்பாடுகள்




SETTINGS → PRIVACY → MESSAGES




Message கட்டுப்பாடு




Message
வெளியிடலை வடிவமைத்தல்

# செய்தி கட்டுப்பாடுகள்

பெரியவர்களிடமிருந்து வரும் தேவையற்ற செய்திகளிலிருந்து இளைஞர்களைப் பாதுகாக்க நாங்கள் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இவ்வாண்டில் பெரியவர்கள் தங்களைப் பின்தொடராத 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு செய்திகள் அனுப்புவதை தடுக்கும் அம்சத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

அதாவது ஒரு பெரியவர் தன்னை பின்தொடராத கட்டிளமைப் பருவத்தினருக்கு செய்தி அனுப்ப முயற்சிக்கும் போது அவர்களுக்கு DM (நேரடி செய்திகள்) செய்வதில் விருப்பமில்லை என்ற அறிவிப்பை பெறுவார்கள். இவ் அம்சம் பதிவு செய்யும் போது மக்கள் எமக்களிக்கும் வயதையும் இயந்திரக் கற்றல் தொழிநுட்பத்தையும்ம் பயன்படுத்தி மக்களின் வயதை கணிக்கும் எங்கள் பணியையும் சார்ந்துள்ளது.




பெரியவர்களிடமிருந்து வரும் தேவையற்ற செய்திகளிலிருந்து இளைஞர்களைப் பாதுகாத்தல்

# செய்தி கட்டுப்பாடுகள்

சந்தேகத்திற்கிடமான நடத்தையை வெளிகாட்டிய புதிய தொழிநுட்பத்தை உருவாக்கியுள்ளோம். உதாரணமாக இளைஞர்களால் அது பல முறை தடுக்கப்பட்டிருக்கலாம் அல்லது புகாரளிக்கப்பட்டிருக்கலாம். எங்களது புதிய தொழிநுட்பம் இளைஞர்களின் கணக்குகளை கண்டறிதல் மற்றும் தொடர்புகொள்வதிலிருந்து கணக்குகளை தடுக்கின்றது.

இத் தொழிநுட்பத்தை பயன்படுத்தி (ஏற்கனவே ஐக்கிய இராச்சியம், பிரான்ஸில் இருந்தது) பெரியவர்களுக்கு எக்ஸ்ப்ளோர், ரீல்ஸ் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட கணக்குகள் ஆகியவற்றில் இளைஞர்களின் கணக்குகளை காண்பிக்க மாட்டோம். இதேவேளை அவர்களாலும் பொது பதிவுகளில் இளைஞர்களின் கருத்துக்களையும் பார்வையிட முடியாது. மேலும் இளைஞர்களின் பதிவுகளில் கருத்துக்களும் தெரிவிக்க இயலாது. இறுதியாக சந்தேகத்திற்கிடமான நபர்கள் பயனர் பெயரைத் தேடுவதன் மூலம் இளைஞர்களின் கணக்குகளை கண்டறிந்தாலும் அவர்களால் பின் தொடர முடியாது.

இளைஞர்களை பாதுகாக்க இத் தொழிநுட்பத்தை பயன்படுத்தக்கூடிய மேலதிக இடங்களைக் கண்டுபிடிக்கவும் தொடர்ந்து நாங்கள் செயற்படுவோம்.









# விளம்பரதாரர்களின் இலக்கினை வரையறுத்தல்

உலகளாவிய விளம்பரங்கள் மூலம் இளைஞர்களை விளம்பரதாரர்கள் எவ்வாறு சென்றடையலாம் என்பதிலும் மாற்றங்களைச் செய்துள்ளோம். தற்போது விளம்பரதாரர்கள் 18 வயதிற்குட்பட்டவர்களை (அல்லது நாட்டிலுள்ள பெரியவர்கள்) அவர்களின் வயது பால் மற்றும் இருப்பிடம் அடிப்படையில் மாத்திரமே விளம்பரப்படுத்த அனுமதிப்போம். ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பாவில் சில இளைஞர்களுக்கு ஏற்கனவே இந்த 3 வகைகளில் விளம்பரதாரர்களை கட்டுப்படுத்தியுள்ளோம். உள்நாட்டு ஜிடிபி ஆர் போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இவ் வயதெல்லை நாட்டுக்கு நாடு வேறுபடும். 18 வயதிற்குட்பட்ட வயதை உயர்த்தி மேலும் தனிப்பயனாக்கப்பட்ட விளம்பரங்களை தெரிவு செய்வதற்கான விருப்பத்தை அகற்றி உலகளவில் இன்ஸ்டாகிராமில் உள்ள அனைத்து இளைஞர்களுக்கும் இந்த வரம்புகளை விரிவு படுத்துவதன் மூலம் இதனை முன்னெடுத்துச் செல்கின்றோம்.

ஏனைய இணைய தளங்கள் மற்றும் அப்களில் (Apps) அவர்களின் விருப்பங்கள் மற்றும் தேர்வுகளின் அடிப்படையிலான விளம்பரங்களை பார்க்காமலிருப்பதற்காக எமது விளம்பர கட்டுப்பாடு அமைப்புகளிலுள்ள கட்டுப்பாடுகள் போன்ற விருப்பமின்மையை எமக்கு தெரிவிப்பதற்கான வழிகளை ஏற்கனவே நாங்கள் வழங்கியுள்ளோம். ஆனால் இளைஞர்கள் இம்முடிவினை எடுக்க தகுதியற்றவர்களாக இருக்கலாம் என இளைஞர் வழக்கறிஞர்கள் கூற நாங்கள் கேள்விப்பட்டுள்ளோம். நாங்கள் அதனை ஒப்புக்கொள்கின்றோம். அதனால்தான் விளம்பரங்கள் மூலம் இளைஞர்களை விளம்பரதாரர்கள் எவ்வாறு சென்றடையலாம் என்பதில் அதிக முன்னெச்செரிக்கையுடன் செயற்படுகின்றோம்.

இளைஞர்கள் 18 வயதினை அடையும் போது இப்போது விளம்பரதாரர்கள் அவர்களை சென்றடைய பயன்படுத்தக்கூடிய இலக்கு விருப்பம் மற்றும் அவர்களின் விளம்பர அனுபவத்தை கட்டுப்படுத்த நாங்கள் வழங்கும் அம்சங்கள் குறித்து அவர்களுக்கு அறிவிப்போம்.

04 /

# தொடர்புகளை நிர்வகித்தல்




இன்ஸ்டாகிராமில் எவ்விதமான கொடுமைப்படுத்தல் மற்றும் துன்புறுத்தலுக்கும் இடமில்லை. அத்துடன் ஒருவரை கொடுமைப்படுத்தல் மற்றும் துன்புறுத்தும் நோக்கத்துடன் கணக்குகளை உருவாக்கல், புகைப்படங்களை வெளியிடல் மற்றும் கருத்துக்களை பதிவிடல் போன்றன எங்கள் கொள்கைகளுக்கு எதிரானதாகும். உங்களது கட்டிளமைப் பருவத்தினர் கொடுமைப்படுத்தல் மற்றும் துன்புறுத்தலுக்குரிய புகைப்படங்கள், கணக்குகள், வீடியோக்கள், கருத்துக்கள் மற்றும் செய்திகளை பார்ப்பார்களாயின் இடுகையின் மேல் வலது மூலையில் உள்ள "..." குறியீட்டை அழுத்துவதன் மூலம் கருத்தின் இடது பக்கமாக தட்டுவதன் மூலம் அல்லது செய்திகளை டேப்(Tap) செய்து ஹோல்ட் செய்வதன் மூலம் மற்றும் புகாரளித்தலை அழுத்துவதன் மூலம் புகாரளிக்கலாம் என்பதை தெரியப்படுத்துங்கள்.


புகாரளித்தல் முற்றிலும் பிரத்தியேகமானது. புகாரளிக்கப்பட்ட நபரிடம் எவ்வகையிலும் உங்களது கட்டிளமைப் பருவத்தினரின் தகவல்களை வெளியிட மாட்டோம்.

# தொடர்புகளைப் புகாரளித்தல்


ப்ரொப்பைல்/ கணக்குகள், இடுகைகள், கருத்துக்கள், DMகள், நேரடிகள் (Lives), ஸ்டோரிஸ், ஐஜிடிவி மற்றும் ரீல்ஸ் என இன்ஸ்டாகிராமில் உள்ள உள்ளடக்கம் தொடர்பாக யார் வேண்டுமானாலும் புகாரளிக்கலாம்.





ப்ரொப்பைல்:
ப்ரொப்பைலின் வலது மேல் முலையிலுள்ள “...” அழுத்துக. புகாரளிக்க





கமென்ட்ஸ்:
கமென்ட்களின் வலது மேல் முலையிலுள்ள “...” அழுத்துக. புகாரளிக்க





கமென்ட்ஸ்:
கமென்ட் இனை இடது பக்கம் தள்ளுக அழுத்துக. இக் கமென்ட் இனை புகாரளிக்க





DMகள்:
தனிப்பட்ட செய்திகளை டெப் (tap) செய்து ஹோல்ட் செய்யுங்கள் → புகாரளிக்க




ஸ்டோரிஸ்:
ஸ்டோரியின் வலது மேல் முலையிலுள்ள “...” அழுத்துக. புகாரளிக்க





லைவ்ஸ் (Lives):
நேரடியின் அடிப்பாகத்தின் கருத்துக்கு அடுத்துள்ள “...” அழுத்துக. புகாரளிக்க





ரீல்ஸ்:
ரீல்ஸின் அடிப்பாகத்தின் “...” அழுத்துக. புகாரளிக்க

## கோரிக்கைகளை ஆதரித்தல்

எமது சமூகம் தற்போது ஆதரவு கோரிக்கைகளுக்கான அணுகலைப் பெற்றுள்ளது. நீங்களும் உங்களது கட்டிளமைப் பருவத்தினரும் பதிவு செய்த அறிக்கைகளில் தொடர்ந்து இருக்கவும் உங்களது கட்டிளமைப் பருவத்தினரின் கணக்கின் மீறல்கள் குறித்த புதுப்பித்தல்களைப் பின்பற்றவும் முடியும். ஒவ்வொருவரும் தங்கள் அறிக்கைகள் மற்றும் மீறல்களைப் பார்ப்பதற்கான அணுகலை உறுதி செய்வதன் மூலம் எங்கள் செயற்பாட்டின் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதை நோக்காக கொண்டுள்ளது. எங்கள் செயற்பாடுகள் நியாயமானவை என உறுதி செய்யும் முயற்சியில் மக்கள் ஏற்காத முடிவுகளை மேன் முறையீடு செய்ய இது பிரத்தியேக இடத்தையும் வழங்குகின்றது.




அமைப்பு-உதவி → கோரிக்கைகளை ஆதரித்தல்




அனைத்து அறிக்கைகள் மற்றும் மீறல்களைப் பார்வையிடல்






# லைக் எண்ணிக்கைகளை நிர்வகித்தல்

எங்களது விருப்பம் மக்கள் இன்ஸ்டாகிராமில் பகிர்ந்த புகைப்படங்கள் மற்றும் காணொளியில் கவனம் செலுத்த வேண்டும் மாறாக எத்தனை விருப்பங்கள் பெற்றுள்ளது என்பதில் மக்களின் கவனம் செல்வது அல்ல. இன்ஸ்டாகிராமில் அவர்களின் சொந்த அனுபவத்திற்கு மேலாக எங்கள் சமூக கட்டுப்பாட்டையும் வழங்க விரும்புகிறோம். அதனால்தான் தற்பொழுது ஒருவரின் பதிவுக்கு எத்தனை விருப்புக்கள் பெற்றுள்ளது என்பதை மறைக்கக் கூடிய விருப்பத் தெரிவு எல்லாருக்கும் வழங்கியுள்ளோம். அதேபோல தங்களது சொந்த பதிவிற்கு பெற்றுக்கொண்ட விருப்பங்களின் எண்ணிக்கையை மறைக்கவும் விருப்பத் தெரிவு வழங்கியுள்ளோம் இதனால் மற்றவர்களுக்கு உங்களது பதிவு எத்தனை விருப்பம் பெற்றுள்ளது என்பதை காண முடியாது.


# லைக் எண்ணிக்கைகளை நிர்வகித்தல்





உங்களது பதிவிற்கான விருப்பங்களை மறைக்க




லைக் எண்ணிக்கையற்ற உங்களது பதிவு




மற்றவர் இடுகையின் லைக் எண்ணிக்கையை மறைக்க அமைப்புகளுக்கு பிரவேசிக்க




அமைப்பு-தனியுரிமை → இடுகை → லைக் மற்றும் விவ் எண்ணிக்கையை மறைக்க







## தேவையற்ற தொடர்புகளை தடுத்தல் (ப்ளொக் செய்தல்)

உங்களது கட்டிளமைப் பருவத்தினர் தங்களுக்கு தேவையில்லாத தொடர்புகளை தடுத்து வைக்க முடியும். அவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட கனவுகளால் உங்கள் கட்டிளமைப் பருவத்தினரின் பதிவுகள் கதைகள் மற்றும் நேரடி ஒலிபரப்புக்களை பார்வையிடவோ கருத்துக்கள் தெரிவிக்கவோ முடியாது. தடுத்து வைத்தால் தடுத்து வைக்கப்பட்ட கணக்கிற்கு அறிவிக்கப்படும் என்று அஞ்சி கட்டிளமைப் பருவத்தினர் சில நபர்களை தடுத்து வைக்க விரும்பமாட்டார்கள் என்பது நமக்கு தெரியும் அது அப்படி அல்ல உங்கள் குழந்தைகள் யாரை தடுத்து வைத்தனர் யாரை எப்போது தடுத்தனர் என்பதை நாங்கள் அறிவிக்கமாட்டோம். உங்கள் கட்டிளமைப் பருவத்தினருக்கு வேண்டிய நேரத்தில் அவர்களைத் தடுப்பில் இருந்து எடுக்க முடியும். நீங்கள் ஏற்கனவே தடுத்து வைத்த ஒருவர் மீண்டும் உங்களுடன் தொடர்புகொள்ள புதியதொரு கணக்கை உருவாக்கினால் அதிலிருந்து தொடர்புகொள்ள கடினமாக இருக்கும் வகையில் நாங்கள் புதிய அம்சத்தை சமீபத்தில் அறிவித்துள்ளோம். இந்த அம்சத்தின் மூலமாக ஒருவரை நீங்கள் தடுத்து வைக்க முயற்சிக்கும் போது அவர் வேறுவகையில் உங்களை தொடர்புகொள்ள உருவாக்கப்படும் புதிய கணக்குகளையும் தடுத்து வைக்கலாம் about.instagram.com/blog/announcements/introducing-new-tools-to-protect-our-community-from-abuse.


# தேவையற்ற தொடர்புகளை தடுத்தல் (ப்ளொக் செய்தல்)




ப்ரொப்பைல் → மேல் வலது மூலையில் உள்ள "…" அழுத்துக → ப்ளொக்





தடுக்கப்பட்ட கணக்கு




அமைப்பு-தனியுரிமை → தடுக்கப்பட்ட கணக்கு

## ஒரு கணக்கினை ம்யூட் செய்தல்


உங்கள் கட்டிளமைப் பருவத்தினர் தொடர்பு கொள்ளவிரும்பாத எனினும் முடக்கத் தயங்கும் கணக்குகள் இருக்கலாம். முடக்கி வைத்தல் என்பது உங்கள் கட்டிளமைப் பருவத்தினர் அவருடைய கணக்கில் அவர்களை முடக்கி வைத்த நபரின் அல்லது கணக்கின் பதிவுகள் மற்றும் கதைகள் தென்படாது . முடக்கப்பட்ட கணக்குகளுக்கு தங்களுடைய கணக்கு முடக்கப்பட்டுள்ளது என்பது தெரியப்படுத்தமாட்டாது மற்றும் உங்களது கட்டிளமைப் பருவத்தினர் நினைத்தால் முடக்கத்தை நீக்கமுடியும்.




PROFILE → FOLLOWING TAP → MUTE

## ஒரு கணக்கினை கட்டுப்படுத்தல்

சில நேரங்களில் கட்டிளமைப் பருவத்தினர் ஒரு கணக்கினை தடுத்து வைத்தல் அல்லது முடக்க தயங்குவார்கள், காரணம் அது சங்கடமான நிலைமைகளை அல்லது அச்சுறுத்தல்களை மிரட்டல்களை ஏற்படுத்தும் என்று நினைக்கலாம். அதற்கு உதவியாக நாங்கள் கணக்கை கட்டுப்படுத்தல் முறையை உருவாக்கினோம். இது உங்கள் கட்டிளமைப் பருவத்தினரின் கணக்கை பிள்ளைகளை அச்சுறுத்தும் அல்லது மிரட்டும் நபர்களுக்கு தெரியாமல் பாதுகாக்க அனுமதிக்கிறது. ஒரு முறை அவர்கள் ஒருவரின் கணக்கை கட்டுப்படுத்தினால், கட்டுப்பாட்டுக்குட்பட்ட கணக்கில் இருந்து வரும் இடுகைகளை அந்த நபர் மாத்திரமே பார்க்க முடியும் அதாவது கட்டுப்பாட்டுக்குட்பட்ட கணக்கு உரிமையாளர்கள் மாத்திரமே பார்க்க முடியும். கட்டுப்படுத்தப்பட்ட கணக்கு உரிமையாளர்களால் உங்களது கட்டிளமைப் பருவத்தினர் நிகழ்நிலையில் உள்ளனரா இல்லையா என்பதை அறிந்துகொள்ள முடியாது. மற்றும் உங்களது கட்டிளமைப் பருவத்தினர் கட்டுப்பாட்டிலிருந்து குறித்த கணக்கை நீக்க முடியும்.




ப்ரொபைல் → மேல் வலது மூலையில் உள்ள "..." அழுத்துக → கட்டுப்படுத்துக

05 /


# கமென்ட்களை நிர்வகித்தல்





## கமெண்ட்ஸ் கட்டுப்பாடுகள்

உங்கள் கட்டிளமைப்பருவ பிள்ளைகள் தங்கள் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களில் யார் கருத்து தெரிவிக்கலாம் என்பதை கட்டுப்படுத்த முடியும். இன்ஸ்டாகிராமில் தனியுரிமை அமைப்பில் கருத்து என்ற பிரிவில் சென்று யார் யார் கருத்து தெரிவிக்கலாம் என்பதை திட்டமிட முடியும். அதில் அனைவரும், அவர்கள் பின்தொடர்பவர்கள், உங்கள் கட்டிளமைப்பருவ பிள்ளையை பின்தொடர்பவர்கள் அல்லது பின் தொடர்பவர்கள் மாத்திரம் ஆகியோரிடமிருந்து கருத்துக்களை உள்வாங்கமுடியும். அல்லது கருத்துக்களை முற்றிலுமாக நீக்கவும் முடியும்.




அமைப்பு → தனியுரிமை → கமெண்ட்





# பொருத்தமற்ற கமென்ட்களை பிள்ட்டர் செய்தல்


கருத்துக்களை முழுவதுமாக முடக்குவதுடன் உங்களது என்ன கமென்ட்கள் தோன்றலாம் என்பதை நிர்வகிக்க உதவும் கட்டுப்பாடுகள் எம்மிடம் உண்டு. உங்களது பதிவுகளின் கீழ் வரும் கருத்துக்கள் புண்படுத்தும் அல்லது மிரட்டும் நோக்கம் கொண்டவையாக இருந்தால் அவற்றை மறைக்கமுடியும் புண்படுத்தும் அல்லது மிரட்டும் கமென்ட்களை தானாகவே மறைக்கும் வடிப்பான்களை உருவாக்கியுள்ளோம். மேலும் ‘கமென்ட்களை மறை’ என்ற விருப்பத்தை நாங்கள் தொடங்கினோம். அவை நமது விதிகளை மீறிவிட்டாலும் கூட முறையற்ற கமென்ட்களை தானாகவே மறைக்கும். உங்களது பதின்மவயதுப் பிள்ளைகள் தங்கள் சொந்த தனிப்பயன் சொற்களின் பட்டியலை உருவாக்கலாம். சொற்றொடர்கள் அல்லது இமோஜிகள் மற்றும் அவர்களை புண்படுத்தும் எந்த கமென்ட்களையும் அவர்களால் மறைக்கமுடியும். இந்தவிதிமுறைகள் அவர்களின் இடுகைகளில் தானாக மறைக்கப்படும் அதனால் அவர்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றுபவர்கள் இந்த இடுகைகளை பார்க்க முடியாது. நாங்கள் உண்மையில் அவர்களை புண்படுத்தும் கமென்ட்களை பார்ப்பதிலிருந்து அவர்களைப் பாதுகாக்க ஊக்குவிக்கிறோம்.

# புண்படுத்தும் செய்திகளை பிள்ட்டர் செய்தல்


இன்ஸ்டாகிராமில் தனிப்பட்ட குறுஞ்செய்தி பகுதியில் மிரட்டல்கள், புண்படுத்தும் அல்லது தவறான செய்திகளை பெறுவதை நாங்கள் விரும்புவதில்லை. தனிப்பட்ட குறுஞ்செய்திகள் ஒரு தொடர்பாடலாக இருப்பதினால் மற்ற இடங்களில் செய்வதுபோல வெறுப்பான பேச்சு கொடுமைப்படுத்தும் பேச்சுகள் போன்றவற்றை நாங்கள் முன்கூட்டியே ஆராய்வது இல்லை, அதற்காக எமது சமூகத்தை பாதுகாக்க முடியாது என்பது அர்த்தமல்ல. உங்களுக்கு யார் செய்தி அனுப்பலாம் என்பதை தேர்வு செய்யும் எங்களின் தற்போதைய குறுஞ்செய்தி கட்டுப்பாடுகளுடன் நாங்கள் ஒரு புதிய கருவியை உருவாக்கியுள்ளோம் .அது இயக்கப்படும் போது தீங்கிழைக்கும் வார்த்தைகள் சொற்றொடர்கள் மற்றும் இமோஜிகள் அடங்கிய தனிப்பட்ட குறுஞ்செய்தி கோரிக்கைகளை தானாகவே வடிகட்டிவிடும் எனவே நீங்கள் பார்க்க வேண்டிய  அவசியம் இல்லை. உங்களது கட்டிளமைப்பருவத்தினர் இந்த கருவியை உபயோகிக்கும் போது நாங்கள் ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியில் உள்ள முன்னணி பாகுபாடு எதிர்ப்பு மற்றும் கொடுமைப்படுத்துதல் எதிர்ப்பு அமைப்புகளுடன் இணைந்து உருவாக்கி வெளியிட்டுள்ள வரையறுக்கப்பட்ட தாக்குதல் விதிமுறைகளின் பட்டியலை பயன்படுத்தலாம். அவர்களே அவர்கள் தனிப்பட்ட முறையில் புண்படுத்தும் வார்த்தைகள் சொற்றொடர்கள் அல்லது முகபாவனைகளுக்கான பட்டியலை உருவாக்கலாம், உங்கள் பிள்ளைகள் இதனை பயன்படுத்த நாங்கள் பரிந்துரைக்கிறோம். வெவ்வேறு வார்த்தைகள் வெவ்வேறு நபர்களை புண்படுத்தும் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம் இந்த புண்படுத்தும் வார்த்தைகள், சொற்றொடர்கள் அல்லது முகபாவனைகள் உள்ள எந்த தனிப்பட்ட கோரிக்கையும் தானாகவே மறைக்கப்பட்ட கோரிக்கைகளால் வடிகட்டப்படும். அதனை பார்க்க வேண்டிய அவசியமில்லை. மேலும் அதைபெறும் போது அவர்கள் அதனை அறிய மாட்டார்கள். அவர்கள் மறைக்கப்பட்ட கோரிக்கைகளை திறக்க முயற்சிப்பார்களாயின் தேர்வு செய்த செய்தியின் உரை மூடப்பட்டிருக்கும் அதனால் அவர்கள் அதை கண்டறிய தட்டினாலே தவிர அவர்களால் பார்வையிட முடியாது. அவர்கள் அக் கோரிக்கையை ஏற்கவோ நீக்கவோ அல்லது புகார் அளிக்கவோ அங்கு தெரிவு செய்ய வழிகள் உள்ளது. உங்கள் மறைக்கப்பட்ட வார்த்தைகள் எனப்படும் தனியுரிமை அமைப்புகள் என்ற புதிய பிரிவில் கருத்து மற்றும் தனிப்பட்ட குறுந்தகவல் கோரிக்கைகளை இயக்கலாம் மற்றும் முடக்கிவைக்கலாம்.




# புண்படுத்தும் செய்திகளை பிள்ட்டர் செய்தல்





Settings → Privacy → Hidden words




Messege → Request tab → Message → Request → Hidden Requests




மறைக்கப்பட்ட கோரிக்கைகள் (Requests) இன்பாக்ஸ்





மறைக்கப்பட்ட DM

## கமென்ட்ஸ் எச்சரிக்கைகள்


யாராவது தீங்கு விளைவிக்கும் அல்லது புண்படுத்தக் கூடிய கமென்ட் (கருத்துக்களை) இடுகையிட முயற்சிக்கும் போது அவற்றைக் கண்டறிய AI பயன்படுத்துகிறோம். நாங்கள் அவர்களுக்கு மறு பரிசீலனை செய்ய ஒரு வாய்ப்பை அளிக்க வேண்டும் என்று எச்சரிக்கை அனுப்புகிறோம். யாராவது திரும்பத்திரும்ப புண்படுத்தும் கமென்ட்களை இடுகையிட முயற்சித்தால் நாங்கள் எங்கள் சமூக வழிகாட்டுதல்களை அவர்களுக்கும் நினைவூட்டி வலுவான முக்கிய எச்சரிக்கை பலவற்றை காட்டுகிறோம், மற்றும் அவர்களின் கமென்ட்டினை நாங்கள் நீக்கலாம் அல்லது மறைக்கலாம் என்று எச்சரிக்கிறோம்.

இந்த கமென்ட் எச்சரிக்கைகள் தொடங்கியதில் இருந்து இன்ஸ்டாகிராமில் கொடுமைப்படுத்தும் விளைவுகளை மக்களுக்கு நினைவூட்டுதல் மற்றும் கமென்ட்டினை எழுதும் போது நிகழ்நேர கமென்ட்களை வழங்குதல் போன்றவை நடத்தை மாற்றுவதற்கான மிகச்சிறந்த வழி என்பதை அறிந்துகொண்டோம்.

ஓன்றை எடுக்க முயற்சிக்கும் போது இரண்டாவது அல்லது மூன்றாவது கமென்ட் வரும்வரை காத்திருப்பதைவிட முதன்முறையாக இந்த வலுவான எச்சரிக்கை காட்டும் மாற்றத்தை செய்தோம்




பொருத்தமற்ற கமென்ட்களை போஸ்ட் செய்தவுடன் எச்சரிக்கை செய்தல்




சமூக வழிகாட்டுதல்களை நினைவூட்டுதல்





# மொத்த கமென்ட்ஸ் முகாமைத்துவம்

கமென்ட்களை நீக்கி நிர்வகிப்பது மிகவும் சிரமமாக இருக்கும் என்பதை நாங்கள் அறிவோம். எனவே கமென்ட்களை மொத்தமாக நீக்குவதற்கான அம்சங்களை அறிமுகப்படுத்தி உள்ளோம். அதேபோல் எதிர்மறை கமென்ட்களை இடுகைகளாக இடும் பல கணக்குகளை தடுக்கலாம் அல்லது கட்டுப்படுத்தலாம்.


iOS  இந்த அம்சத்தை இயக்க, ஒரு கமென்டை தட்டவும் அல்லது 'அனைத்து கமென்ட்களையும் காண்க' என்பதை தட்டவும். பின்னர் மேல் வலது மூலையில் உள்ள '......' ஐகானை தட்டவும். கமென்ட்களை நிர்வகி என்பதைத் தேர்ந்தெடுத்து ஒரே நேரத்தில் நீக்கவேண்டிய 25 கமென்ட்கள் வரை தேர்வுசெய்யவும். இங்கிருந்து நீங்கள், மொத்தமாக கணக்குகளை கட்டுப்படுத்த அல்லது தடுக்க தேர்வுசெய்யலாம்.

ஆண்ட்ராய்டில் கருத்து அல்லது அனைத்து கமென்ட்களையும் காண்க என்பதை தட்டவும். நீங்கள் நிர்வகிக்க விரும்பும் கமென்ட்களை தேர்ந்தெடுக்கவும். கமென்ட்களை மொத்தமாக நீக்குவதற்கு மேல் வலது மூலையில் உள்ள குப்பைத் தொட்டி ஐகானை தட்டவும். அல்லது நீங்கள் பல கணக்குகளை கட்டுப்படுத்த அல்லது தடுக்க நினைத்தால்,மேல் வலது மூலையில் உள்ள மற்ற  ஐகானை தட்டி நீங்கள் அவ்வாறு செய்யலாம்


# மொத்த கமென்ட்ஸ் முகாமைத்துவம்





மேல் வலது மூலையில் உள்ள "..." அழுத்துக




கமென்ட் முகாமைத்துவத்தை அழுத்துக




நீக்க வேண்டிய கமென்ட்களை தெரிவு செய்க. "நீக்குக" அழுத்துக





"கமென்ட்களை நீக்குக" அழுத்துக


## கமெண்ட்களை ப்ளொக் செய்தல்

உங்களது கட்டிளமை பருவத்தினர் பேச விரும்பாத கணக்குகளை ப்ளொக் செய்யலாம். ப்ளொக் செய்த கணக்கிலிருந்து கமெண்ட்கள் தோன்றுவதில்லை

உங்களது கட்டிளமை பருவத்தினர் அனைத்து இடுகைகளுக்கும் அல்லது தனிப்பட்ட இடுகைகளுக்கான கமெண்ட்களை ஆப் (off) செய்ய முடியும்




SETTINGS → PRIVACY → COMMENTS → BLOCK COMMENTS FROM




இடுகையின் மூலையிலுள்ள ('...') டெப் செய்யுங்கள், Turn Off Commenting தெரிவு செய்யுங்கள்.







## நேர்மறையான கமென்ட்களை பின் செய்தல்

எதிர்மறையான கமென்ட்களை நீக்குதல் மட்டுமன்றி நேர்மறையான தொடர்புகளைப் அதிகரித்து ஊக்குவிப்பதற்கான எளிய முறையை மக்களுக்கு வழங்க விரும்புகின்றோம். பின் செய்யப்பட்ட கமென்ட்கள் உங்களது கட்டிளமை பருவத்தினருக்கு அவர்களின் கணக்கிற்கு தேவையான தொனியை அமைப்பதற்கான வழியை வழங்குகிறது. மேலும் அவர்களின் கமென்ட் தொடரின் மேல் தேர்ந்தெடுக்கப்பட்ட பல கமென்ட்களை பின் செய்வதன் மூலம் அவர்களின் சமூகத்துடன் ஈடுபடலாம்.


# நேர்மறையான கமெண்ட்களை பின் செய்தல்





கமெண்ட்களை பார்த்திடுக




கமெண்ட் இன் இடது பக்கம் தள்ளுக
" 📌 " அழுத்துக




"Pin Comment" ஐ அழுத்துக




பின் செய்யப்பட்ட
கமெண்ட்ஸ்களின் மேலே
தோன்றும்






## டேக் (TAG) மற்றும் மென்ஷன்களை கட்டுப்படுத்தல்


இன்ஸ்டாகிராமில் தங்களை யார் டெக் (TAG) மற்றும் மென்ஷன் செய்யலாம் என்பதை நிர்வகிப்பதற்கு மக்களுக்கு அனுமதியளிக்கும் புதிய அம்சங்களை உருவாக்கியுள்ளோம்.

உங்களது கட்டிளமை பருவத்தினர் கமென்டில் , கெப்ஷன் மற்றும் ஸ்டோரிகளில் அனைவரும், பாலோ செய்பவர்கள் மாத்திரம் அல்லது யாருமற்றவாறு தங்களை யார் டேக் (TAG) மற்றும் மென்ஷன் செய்யலாம் என தெரிவு செய்யலாம்.


# டேக் (TAG) மற்றும் மென்ஷன்களை கட்டுப்படுத்தல்




அமைப்பு → தனியுரிமை → இடுகை, மென்ஷன்




இடுகைகள் → இடமிருந்து டெக்ஸ்களை அனுமதிக்க




மென்ஷன் → இடமிருந்து மென்ஷன்களை அனுமதிக்க

06 /

# நேரத்தை நிர்வகித்தல்



இன்ஸ்டாகிராமில் நேரம் செலவிடுவது தொடர்பில் கவனம் செலுத்துமிடத்து, உங்கள் பதின்ம வயதுடையவர்களிடம் இது தொடர்பாக கலந்துரையாடுவது மிக முக்கியமான விடயமாகும் அவ்வாறு கலந்துரையாடுவதன் மூலம் வாராந்தம் அல்லது நாளாந்தம் இன்ஸ்டாகிராம் தளத்தில் செலவிடக்கூடிய நேர அளவினை தீர்மானித்து ஒப்பந்தம் செய்தல் அவசியமாகும். அத்துடன் குறித்த நேர இடைவெளிக்கிடையில் இடைவேளை எடுத்துக்கொள்வதும் அதுவும் களைப்படையும் நேரங்களில் இடைவேளை எடுத்துக்கொள்வது மிக அவசியமானதாகும். உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் உதவுவதற்கென பல விதமான கருவிகள் காணப்படுகின்றன. அவற்றை முறையாக பயன்படுத்துவதன் மூலம் உங்கள் இளம்வயது சிறார்கள் குறித்த தளத்தில் செலவிடும் நேரத்தினை கட்டுபடுத்திக்கொள்ளலாம். ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் குடும்பத்திற்காக செலவிடக்கூடிய நேர அளவினை சமநிலையானதாக அமைப்பதற்கு திட்டமிடலாம்.

## உங்களது நடவடிக்கைகளை அறிந்துகொள்ளுதல்


உங்கள் குழந்தைகள் இன்ஸ்டாகிராமில் கடந்த நாள் மற்றும் வாரம் அத்துடன் சராசரி எவ்வளவு நேரம் செலவிட்டார்கள் என்பதை முகப்பு பலகை காட்டுகின்றது. உங்கள் குழந்தைகள் இன்ஸ்டாகிராமில் எவ்வளவு நேரம் செலவிட்டார்கள் என்பதை அறிய நீல நிற பொத்தானை அழுத்தி அறிந்து கொள்ளலாம்.




TAP " ☰ " IN TOP-RIGHT CORNER OF YOUR PROFILE → YOUR ACTIVITY → TIME

## நாளாந்த நினைவூட்டல்களை அமைத்தல்


பதின்ம வயதையுடைய உங்கள் குழந்தைகள் தினமும் நினைவூட்டலை பயன்படுத்துவதன் மூலம் அவர்கள் இன்ஸ்டாகிராமில் செலவிடும் நேரத்தை கட்டுப்படுத்தலாம். உங்கள் குழந்தைகள் தளத்தை பயன்படுத்தும் போது எவ்வாறு உணர்கின்றார்கள் என்பது குறித்து அவர்களுடன் உரையாடி தெறிந்து கொள்ளுங்கள். இதை பயன்படுத்துவதன் மூலம் முழுமையான பயன்பாட்டினை பெறாத விடத்து பயன்படுத்துவதில் அர்த்தம் உண்டா? தினசரி நினைவூட்டலை அமைத்தல் அவர்கள் இன்ஸ்டாகிராமை எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள் என்பது குறித்து கலந்துரையாடுவதற்கு ஒரு நல்ல வழியாக அமைகின்றது.




YOUR ACTIVITY → TIME → SET DAILY REMINDER

## அறிவிப்பை முடக்கு

பதின்ம வயதையுடைய உங்கள் குழந்தைகள் ஒரு குறித்த காலத்திற்கு "Pause All Notifications" எனும் அனைத்து அறிவிப்புகளையும் இடைநிறுத்தும் அம்சத்தை பயன்படுத்தி இன்ஸ்டாகிராம் தகவல்களை நிறுத்தி வைக்க முடியும். முன்னமைக்கப்பட்ட நேரம் முடிவடைந்ததும் அறிவிப்புகள் மீட்டமைக்காமலேயே இயல்பு நிலைக்கு திரும்பிவிடும்.




SETTINGS → NOTIFICATIONS → PAUSE ALL





எவ்வளவு நேரம் பயன்படுத்துகின்றார்கள் மற்றும் அவர்கள் பயன்படுத்தும் விதம் என்பதை விட எவ்வாறு அவர்கள் சமூக வலைதளங்களை பாவனை செய்கின்றார்கள் அதன் ஊடாக அவர்கள் பார்க்கின்ற மற்றும் பார்க்காத விடயங்கள் எவ்வாறு அவர்களை பாதிக்கின்றன என்பதே முக்கியமான விடயங்களாகும்.

தாம் பார்வையிடும் சுய விபரங்கள், இடுகைகள் என்பவற்றைக்கொண்டு தமது அனுபவத்தை மேம்படுத்த முனைகின்றார்கள், ஆயினும் பார்வையிடுபவற்றை பாதிக்ககூடிய மேலும் சில வெயிப்படையான விடயங்கள் உள்ளன.

- **நெருங்கிய நண்பர்களை தேர்ந்தெடுங்கள்.**
  பதின்ம வயதையுடையவர்கள் கதைகளை தெரிந்து கொள்ள தமது நெருங்கிய நண்பர்களை தேர்ந்தெடுக்கலாம். அது அவர்களது நெருங்கிய நண்பர்களிடையே பகிர்ந்துகொள்ளகூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஊட்டம் மற்றும் கதைகள் இரண்டிலும் நண்பர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- **விருப்பமில்லாத நண்பர்களை முடக்கு**
  இளைஞர்கள் குறித்த கணக்குகளில் பகிரும் விடயங்களை பார்வையிட விரும்பாதவிடத்து கணக்குகளை முடக்கலாம். இருப்பினும் அவற்றை முழுவதுமாக பின்தொடர்வதை நிறுத்தவதில் தயக்கம் காட்டலாம். எனினும் முடக்கப்பட்ட கணக்குகளுக்கு தங்களை முடக்கியவர்களை தெரியாது.

- **புரிந்துரைக்கப்பட்ட இடுகைகளை “ஆர்வமில்லை” எனக் குறிப்பிடவும்.**
  இளைஞர்கள் பரிந்துரைகளை பார்க்கும் போதெல்லாம் அது எக்ஸ்ப்ளோரில் இருந்தாலும் அல்லது ஃபீடில் இருந்தாலும் அந்த இடுகையில் “ஆர்வமில்லை” எனக் குறிப்பிடலாம். எதிர்காலத்தில் இதுபோன்ற பரிந்துரைகளை இளைஞர்களின் பார்வைக்கு கொண்டுசெல்லாமலிருப்பதற்கு எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். இன்ஸ்டாகிராமில் உள்ளடக்கம் எவ்வாறு தரப்படுகின்றது, காட்டப்படுகின்றது மற்றும் மதிப்பிடப்படுகின்றது என்பவை சமன்பாட்டின் ஒரு அங்கம் மட்டுமே. இளைஞர்கள் தங்கள் இன்ஸ்டாகிராம் அனுபவத்தை அடிப்படையாக கொண்டு வடிவமைக்க நாம் இன்னும் பலவற்றைச் செய்யலாம். எங்கள் தரவரிசை தொழில்நுட்பத்தை தொடர்ந்து மேம்படுத்துவதுடன் தவறுகளை குறைத்து மூன்று பகுதிகளையும் மேம்படுத்துவதில் முனைப்புடன் செயல்படுவதே எமது திட்டமாகும். காத்திருங்கள்.


07 /

# பாதுகாப்பை நிர்வகித்தல்



## இரண்டு காரணி பாதுகாப்பு உறுதிப்பாடு


உங்கள் பதின்ம வயது குழந்தைகளின் கணக்குகளையும் பாவனையையும் பாதுகாத்துக்கொள்ளுங்கள். இரண்டு காரணி பாதுகாப்பு உறுதிப்பாடு என்பது மேலதிகமாக வழங்கப்படும் பாதுகாப்பு கட்டமைப்பாகும். இது ஒரு கணக்கை அங்கீகரிக்கப்படாதவர்களிடமிருந்து பாதுகாக்க உதவும் பாதுகாப்பு அடுக்கு கடவுச்சொல் பயன்பாடு ஆகும். மற்றும் அமைப்பினூடாக இதனை செயல் படுத்த முடியும். தொடர்ச்சியாக இன்ஸ்டாகிராமில் உள்நுழையும் போது கடவுச்சொல்லை பயன்படுத்துவதுடன் மேலதிக பாதுகாப்பிற்காக பாதுகாப்பு இலக்கமொன்றை குறித்த தளத்தினூடாக குறுந்தகவலொன்று அனுப்பிவைக்கப்படும்.




SETTINGS → SECURITY → TWO-FACTOR AUTHENTICATION

## இன்ஸ்டாகிராமிடமிருந்தான மின்னஞ்சல்


உங்கள் பதின்ம வயது பிள்ளைகளின் கணக்கு பாதுகாப்பை சரிபார்த்து நீங்களோ அல்லது உங்கள் பிள்ளைகளோ உங்கள் கணக்கு தொடர்பாக இன்ஸ்டாகிராமிலிருந்து அனுப்பப்படும் எந்தவொரு முக்கிய மின்னஞ்சலையும் தவறவிடாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். இன்ஸ்டாகிராமிலிருந்து உங்கள் கணக்கு தொடர்பான தகவல்ளை உங்கள் அமைப்பிலுள்ள இன்ஸ்டாகிராம் மின்னஞ்சல் முகவரிக்கே அனுப்பப்படும்.




SETTINGS → SECURITY → EMAILS FROM INSTAGRAM

## உழ்நுழைவு (லொக்கின்) செயற்பாடுகள்


நீங்கள் குறித்த நேரத்தில் ஒரு இன்ஸ்டாகிராம் கணக்கிற்கு மட்டுமே உள் நுழைய முடியும். எனினும் உங்கள் சாதனத்தில் பல கணக்குகளை செயற்பாட்டில்வைத்திருக்க முடியும். இன்ஸ்டாகிராம் அமைப்பினை பயன்படுத்தி கணக்குகளை நீக்கவோ செயற்படுத்தவோ முடியம்.




SETTINGS → SECURITY → LOGIN ACTIVITY

## காப்புக்குறியீடு (பெக்கப் கோட்ஸ்)

இரண்டு பாதுகாப்பு உறுதிப்பாட்டிற்கான அங்கீகாரம் அமைக்கப்பட்டவுடன் நீங்கள் காப்பு குறியீடுகளை பயன்படுத்தலாம். இதன்மூலம் குறுந்தகவல் ஊடாக அல்லது தளத்தினூடாக நீங்கள் இரண்டு பாதுகாப்பு இலக்கத்தை பெற்றுக்கொள்ள முடியாதவிடத்து உங்கள் கணக்கினை பயன்படுத்த முடியும்.




SETTINGS → SECURITY → TWO-FACTOR AUTHENTICATION → ADDITIONAL METHODS → BACKUP CODES

08 /

# ஏனைய உதவிகள்



ஹி(த்)தவதி (Hithawathi) என்பது LK டொமென் ரெஜிஸ்றியின் அனுசரனையின் கீழ் செயற்படும் சைபர் துன்புறுத்தல் மற்றும் அது தொடர்பில் நிகழும் தாக்கங்களை குறைப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஒரு திட்டமாகும். இது சமூக விழிப்புணர்வூட்டும் சேவைகள் மற்றும் சைபர் ஸ்டோகிங் (cyberstalking), சைபர் புலீங் (cyberbullying), ப்ளெக்மெயில் (blackmail) மற்றும் வேறு எவ்வகையிலேனும் துன்புறுத்தல்களுக்கு உள்ளானவர்களுக்கு வழிகாட்டல் மற்றும் உதவிகளைப் பெற்றுத்தருவதனை பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.

இத் திட்டமானது இன்று இணையத்தளம், மின்னஞ்சல், தொலைபேசி அழைப்புக்கள் போன்ற பல்வேறு வழிகளை உள்ளடக்கியுள்ளதோடு பல அலைவரிசைகள் மற்றும் ஒருங்கிணைந்த நெட்வேர்க் தளத்தினூடாக அறிவு, உதவி, வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குகின்றது.

இணையத்தள பாவனையாளர்கள் குறிப்பாக இளம் பெண் பிள்ளைகள், யுவதிகள், கட்டிளமைப் பருவத்தினர் மற்றும் சிறார்களுக்காக ஆதரவாளராக செவிசாய்ப்பவராக வழிகாட்டுனராக மற்றும் உதவியாளராக ஹி(த்)தவதி அறிமுகப்படுத்தப்படுகின்றது. ஹி(த்)தவதி ஊடாக சைபர் துன்புறுத்தல், சைபர் திருட்டு ப்ளெக்மெயில் மற்றும் சைபர் புலீங் என்பவற்றுடன் தொடர்புடைய நிகழ்வுகளை அடையாளங் காணும் விதம் தொடர்பில் மக்கள் தெளிவூட்டப்படுகின்றனர். இதேபோல் ஹி(த்)தவதி இதுபோன்ற நிகழ்வுகளை எவ்வாறு தடுப்பது என அறிவுறுத்துவதோடு அவ்வாறான சந்தர்ப்பம் ஏற்படின் வழிகாட்டுவதற்கு எப்போதும் உதவியாக இருக்கும்.

ஹி(த்)தவதி திட்டம் முதன்மையாக யுவதிகளுக்கு, சிறார்களுக்கு மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு அல்லது தகவல் தேடுவோர்க்கு வசதிகளை வழங்கும் எனினும் இது பெண்களுக்கு மட்டுமானதல்ல. யார் வேண்டுமானாலும் அவர்களின் பால், வயது அல்லது ஏனைய எந்த பேதங்களுமின்றி ஹி(த்) தவதி மூலம் உதவி கேட்கலாம். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஹி(த்)தவதி உதவியினைப் பெற்றுக்கொள்ளலாம். பாதிக்கப்பட்டோருக்கு செவிசாய்த்து அவர்களை சரியான திசையில் வழிநடத்த நன்கு பயிற்சி பெற்ற நம்பகமான பெண் அதிகாரிகளால் மாத்திரம் நடத்தப்படும் ஆதரவு சேவையான ஹி(த்)தவதி மூலம் இதுபோன்ற எந்தவொரு பிரச்சனைக்கும் உதவ முடியும். ஹி(த்)தவதி திட்டத்திற்கு கிடைக்கும் அனைத்து முறையீடுகள் மற்றும் பிரச்சனைகள் தொடர்பான ரகசியம் காக்கப்படும். இச் சேவை தற்போது அலுவலக நேரங்களில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 மணி முதல் மாலை 7.00 மணி வரையிலும் சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரையிலும் கிடைக்கும். எதிர்காலத்தில் 24 X 7 வரை நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஹி(த்)தவதி திட்டத்தின் பிரதான விஷேட சேவைகள் :**

- சமீபத்திய தகவல், அறிவு மற்றும் தொடர்புடைய வழிகாட்டுதலுடன் கூடிய இணையத்தளம்
- இணையத்தள நேரடி கலந்துரையாடல் (Live Chat)
- புகார் மேலாண்மை அமைப்பு
- பயிற்சி பெற்ற பெண் அதிகாரிகளால் மாத்திரமே உடனடி அழைப்புக்கள் இயக்கப்படுகின்றது
- தற்போதைய சைபர் குற்றங்கள் பற்றிய சரியான புரிதல்
- இணையத்தளம்இ Viber/Whatsapp குழுக்கள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட இணைய பாதுகாப்பு குறிப்புகள் மற்றும் செய்திகள்
- ஆன்லைன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் மாதாந்திர டிஜிட்டல் சஞ்சிகை (தமிழ் மொழி பதிப்பை வெளியிட திட்டமிட்டுள்ளது)
- காலத்திற்கேற்ற தலைப்புகளில் Webinars நிகழ்ச்சிகள்
- பேஸ்புக்கில் வாராந்திர வினா நிகழ்ச்சிகள்
- பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் அழைப்பின் பேரில்இ LKDR இன் பயிற்சி திட்டங்கள் மற்றும் துணை நிறுவனங்களின் கீழ்இ Hithawathi குழுவினர் சைபர் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துகிறது

**கீழே உள்ள ஏதேனும் ஊடகம் வழியாக ஹி(த்)தவதி உடன் தொடர்புகொள்ள முடியும்.**

- +94 11 421 6062
- WhatsApp Viber : +94 77 771 1199
- help@hithawathi.lk
- www.hithawathi.lk (information and website live-chat)
- www.facebook.com/hithawathi
- https://hithawathi.blogspot.com
- https://www.youtube.com/channel/UCbOwLZfbv-5OAqrxct5RXIg
- live:hithawathi
- https://twitter.com/hithawathi
- https://www.linkedin.com/company/hithawathi

09 /

# இன்ஸ்டகிராம் வார்த்தைகள் மற்றும் அர்த்தங்கள்

**Block**

புளொக் என்பது யாரேனும் உங்கள் பிள்ளைகளை தொந்தரவு செய்தால் பயன்படுத்தக்கூடிய கருவியாகும். உங்களது இன்ஸ்டாகிராமில் உள்ள ஒருவரை நீக்கும் போது அவருக்கு அறியத்தரப்படமாட்டாது. ஆனால் அவரால் இனி உங்களுடன் தொடர்பு கொள்ள முடியாது.

**Comment**

இது ஒருவரால் இடப்படும் இடுகைக்கு மற்றவர்கள் அளிக்கும் கருத்துகளை குறிக்கின்றது. இது குறித்த இடுகையின் கீழ் தோன்றும்.

**COMMUNITY GUIDELINES**

நாம் நேர்மறையான பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தை வளர்க்க விரும்புகின்றோம். அனைவரும் பயன்பாட்டின்போது எமது சமூக வழிகாட்டுதல்களுக்கு இணங்க வேண்டும். எனவே வெறுக்கத்தக்க இடுகைகள் பேச்சுக்களை கொண்ட உள்ளடக்கங்கள் உடனடியாக நீக்கப்படலாம் அல்லது உங்கள் கணக்குகள் முடக்கப்படலாம்.

**Direct message (DM)**

இது ஒருவருக்கொருவர் நேரடியாக தகவல்கள் தனித்தனியாக அல்லது குழுக்கலாக தகவல்களை பரிமாரிக்கொள்ள இடமளிக்கின்றது.

**Explore**

தளத்தினுாடாக இளைஞர்கள் பார்வையிடும் இடுகைகளுாடாக அவர்கள் ஆர்வம்கொண்டுள்ள இடுகைகள் இதன் மூலம் பரிந்துரைக்கப்படும்.

### பீட் (FEED)

FEED என்பது கட்டிளமைப்பருவத்தினர் தான் பாலோ செய்யும் கணக்கின் போஸ்டினை பார்க்கக்கூடிய இடமாகும். கட்டிளமைப்பருவத்தினர் பொதுவாக பீட் போஸ்ட் தங்களை உற்சாகப்படுத்தும் மற்றும் சிறப்பு வாய்ந்த ஒன்றாக கருதுகின்றனர். பீட் போஸ்ட் புகைப்படமாகவோ வீடியாகவோ இருக்கலாம்

### நேரலை மற்றும் வீடியோ உரையாடல் (Live and video chat)

இது உங்கள் ஓய்வு நேரத்தில் தங்களைப் பின்தொடர்பவர்களுடன் நேரடியாக விடயங்களை பகிர்ந்துக்கொள்ள அவர்களுக்கு வாய்ப்பளிக்கின்றது. அவர்கள் நேரலையில் இருக்கும்போது அதில் இணைவதற்கு நண்பர்களை அழைப்பதற்கான வாய்ப்பும் நூற்றுக்கணக்கான நேரலைப் பங்காளர்களுடன் Co-host வழங்குவது அல்லது கருத்து தெரிவிப்பதுடன் ஹார்டீஸ்களையும் அனுப்ப முடியும். மேலும் அவர்களுக்கு தங்களின் நேரடி செய்தி (DM) மூலம் நான்கு பேர் வரையான எண்ணிக்கையினருடன் வீடியோ உரையாடல்களை மேற்கொள்ளவும் முடியும்.

### போஸ்ட் (POST)

தனது பீட் அல்லது ஸ்டோரீஸ் ஊடாகவோ தனது உணர்வை வெளிப்படுத்தும் ஊடக போஸ்ட் மூலமோ வெளிப்படும். இது புகைப்படமாகவோ அல்லது வீடியோகவோ இருக்கலாம்.

### ப்ரொபயில் (PROFILE)

உங்களது கட்டிளமைப் பருவ பிள்ளையின் (Instagram profile) என்பது அவர்களின் நண்பர்கள் மற்றும் பின்தொடர்பவர்கள் கட்டிளமைப் பருவ பிள்ளையின் மூலம் இடப்பட்டிருக்கும் போஸ்ட் மற்றும் ஸ்டோரீஸ்களை மற்றும் பதில்களை பார்க்கக்கூடிய இடமாகும். இதில் கட்டிளமைப் பருவ பிள்ளையின் அவர் யார் என்பது பற்றிய சிறிய விளக்கம் உள்ளடங்கும். உங்களது கட்டிளமைப் பருவ பிள்ளையின் ப்ரொபயில் தனியுரிமையாக்கப்பட்டிருப்பின் அவரை பின்தொடராதவர்களுக்கு அவரின் ப்ரொபயிலின் புகைப்படம் மற்றும் சிறிய விளக்கம் மாத்திரம் காட்சியளிக்கும்.

### ரீல்ஸ் (REELS)

(Reels) மூலம் Instagram Camera இனால் 30 விநாடிகள் வரையான (videos record) குறுகிய செய்வதற்கும் நனவை செய்வதற்கும் வாய்ப்பளிக்கின்றது. உங்களின் அந்த Reelஇற்கு இசை (effects) இல்லது உங்களால் நிர்மாணிக்கப்பட்ட இசையையோ உட்செலுத்தி முன்வைக்கலாம்.

### முறையிடல் (Report)

முறையிடல் என்பது உங்களது கட்டிளமைப் பருவதினருக்கு தான் விரும்பாத ஒன்று குழுவில் இருப்பதை இணையத்தின் மூலம் தெரிவிப்பதற்கு இருக்கும் வாய்ப்பாகும். எமது குழு வழிகாட்டல்களை மீறுவதாக அவர்கள் கருதும் எதையும் இணையத்தில் புகாரளிக்கும் திறன் உங்களது கட்டிளமைப் பருவதினருக்கு உள்ளது.

### கட்டுப்படுத்தல் (RESTRICT)

கட்டுப்படுத்தல் தொடர்பாக சம்பந்தப்பட்ட நபருக்கு தெரியாத அநாவசியமான தொடர்புகளிலிருந்து தமது கணக்கை பாதுகாத்துக்கொள்ள வாய்ப்பளிக்கும் டூல் ஆக கட்டுப்படுத்தல் (RESTRICT) அறிமுகப்படுத்தப்படுகின்றது. கட்டிளமைப் பருவ பிள்ளைகள் ஒருவரை கட்டுப்படுத்துமிடத்து அந் நபரின் கருத்துக்கள் அந் நபரிற்கு மாத்திரம் தெரிவதோடு மற்றவர்களுக்கு அந் நபரின் கருத்துக்கள் தெரியாது. ஒருவரை கட்டுப்படுத்துமிடத்து அந் நபரிற்கு உங்களது பிள்ளை ஆன்லைனில் ஆக்டிவாக இருக்கும் நேரம் அல்லது அந் நபரின் நேரடிச் செய்திகளை அவர்கள் வாசித்த நேரத்தை காட்டாது.

### ஸ்டோரீஸ் (STORIES)

உங்களது கட்டிளமைப் பருவ பிள்ளை தனது நாட்சென்ற ஸ்டோரீஸ் தனக்கு தெரிவதற்கு அமைக்கும் archiving enableஇனை அமைக்காவிடில் 24 மணித்தியாலயத்தின் பின் அவர் பதிவிட்ட ஸ்டோரீஸ் நிரந்தரமாக நீங்கிவிடும். archiving enable அமைத்து நீக்கப்படாதவை இணையத்தில் இருக்கும். கட்டிளமை பருவத்தினர் விரும்பும் எந்தவொரு நேரத்திலும் Stories Highlights ற்கு செலுத்தி தனது ஸ்டோரீஸ்களை அடிக்கடி பகிர முடியும். 24 மணித்தியாலயத்தில் நீங்கினாலும் உங்களது பிள்ளையின் ஸ்டோரீஸ்களை பார்க்கும் எவரும் அதனை ஸ்கிறீன்ஷொட் ஆக சேமிக்கலாம்.

10 /

# ஆதாரங்கள்



உங்களது கட்டிளமைப் பருவ பிள்ளைக்கு பாதுகாப்பான சமூக ஊடக பாவனைக்காக பங்களிக்கும் மேலதிக டூல்ஸ் மற்றும் ஆதாரங்கள் தொடர்பில் அறிந்துக்கொள்ள எமது about.instagram.com/community/parents. ற்கு பிரவேசியுங்கள்